**<u>நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்</u>**

**<u>முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,</u>**

**<u>நீதித்துறை நடுவர் எண்.2, திண்டுக்கல்</u>**

**<u>2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் நாள் புதன்கிழமை</u>**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 360/2021**

**<u>CNR.No. TNDG03-007349-2021</u>**

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம், திண்டுக்கல்,
குற்ற எண். 750/2018
சட்டப்பிரிவுகள் 6(a) r/w 24(1) COTPA Act and 77 JJ Act

... குற்ற முறையிடுபவர்

/எதிர்/

1. ராஜபாண்டியன் (41/2018),
த/பெ. சண்முகம்,
82A, எருமைக்கார தெரு,
திண்டுக்கல்.

2. செந்தில்குமார் (35/2018),
த/பெ. ராமசாமி,
88A, செல்லாண்டியம்மன்
கோவில் 3வது தெரு,
திண்டுக்கல்.

... எதிரிகள்

**<u>Case – Summary</u>**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.360 of 2021 |

<table>
<tr><td>2.</td><td>Name of the Police station and crime Number</td><td colspan="3">State Represented by<br>Inspector of Police, Town North PS. Dindigul in Cr.No.750/2018</td></tr>
<tr><td>3.</td><td>Name of the accused</td><td colspan="3">1. Rajapandian- A1<br>2. Senthilkumar- A2</td></tr>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">1. Shanmugam – A1<br>2. Ramasamy- A2</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">1. 82A, Erumaikara Street, Dindigul.<br>2.88 A, Chellandiamman Kovl 3rd Street, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">34/2018-A1<br>35/2018-A2</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">17.08.2018 at about 18.30 Hrs.</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">17.08.2018<br>12.05.2021</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">A1, A2 was arrested and remanded on 17.08.2018</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">21.08.2018</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td colspan="3">09.05.2022</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 17.05.2022 the accused questioned on substance of accusation U/s. 6(a) r/w 24(1) COTPA Act and 77 JJ Act<br>Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>19.06.2023</td><td>19.06.2023</td></tr>
<tr><td>PW2</td><td>19.06.2023</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>19.06.2023</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>05.10.2023</td><td>05.10.2023</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW5 | 03.11.2023 | 09.03.2026 |
| 16. | The date of examination of the accused under section 313 of the code – Closed of trial | 11.03.2026 | | |
| 17. | Sentence on order | முடிவாக, எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவுகள் 6(a) r/w 24(i) COTPA Act and 77 juvenile Justice (care and production of Children) Act 2015ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, 1, 2 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. | | |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts | | |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case | | |
| 20. | Property order | Property order passed. | | |

இவ்வழக்கு 12.05.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண். 360/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ரஞ்சித்குமார்,B.A., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 17.08.2018ம் தேதி 14.00 மணிக்கு திண்டுக்கல் சாலைரோட்டில் உள்ள டட்லி பள்ளி பின் கேட்டின் அருகில் எதிரிகள் இருவரும் தங்களது சுயலாபம் கருதி அரசால் தடை செய்யப்பட்ட சைனி பாக்கெட்டுகள். R.M.D பாக்குகள், சாந்தி பாக்குகள் ஆகியவற்றை பள்ளி சிறுவர்களுக்கும், சிறார்களுக்கும் விற்பனை செய்த குற்றத்திற்காக சட்டப்பிரிவுகள் 6 (a) r/w 24 (1) COTP Act and 77 Juvenile Justice ( Care and Protection of Children) Act 2015– ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பால் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 17.05.2022 அன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம்

வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 6 (a) r/w 24 (1) COTP Act and 77 Juvenile Justice ( Care and Protection of Children) Act –2015ன் கீழ் குற்றச்சாட்டை விளக்கிக் கூறியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 6 (a) r/w 24 (1) COTP Act and 77 Juvenile Justice ( Care and Protection of Children) Act 2015– ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது.

**III) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

3. அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இவ்வழக்கின் சம்பவம் பற்றி அ.சா.1, அ.சா.4 ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தில் கடந்த 17.08.2018ம் தேதி திண்டுக்கல் நகர் பகுதிகளில் ரோந்து செய்தபோது டட்லி பள்ளி பின்புறம் கேட் அருகில் சென்றபோது எதிரிகள் வெள்ளை கலர் பிளாஸ்டிக் பையுடன் அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பாக்கெட்டுக்களை சிறுவர்களுக்கு விற்பனை செய்ததாகவும், 4 சிறுவர்கள் அந்த இடத்தில் இருந்தார்கள்

என்றும, 3 சிறுவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், 1 சிறுவனை சார்பு ஆய்வாளர் விசாரித்தார் என்றும், அந்த சிறுவன் பணம் கொடுத்தால் சைனி புகையிலை தருவார்கள் என்றும, தினமும் மதிய உணவு வேளையில் எதிரிகள் இருவரும் அந்த இடத்தில் புகையிலை பொருட்களை விற்றுக்கொண்டு இருப்பார்கள் என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரிகளிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றியதாகவும், எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு சார்பு ஆய்வாளர் உட்படுத்தியதாகவும், எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

5. இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் தங்களுடையது என்றும், கடையில் விசாரித்த நபரை தெரியாது என்றும், என்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்று எனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். 3 அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.2ன் கையொப்பம் என்றும், அது அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 3 அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.3ன் கையொப்பம் என்றும், அது அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட

அ.சா.5 அவரது சாட்சியத்தில் கடந்த 17.08.2018ம் தேதி 14.00 மணிக்கு திண்டுக்கல் சாலை ரோடு, டட்லி பள்ளி பின்புற கேட் அரசால் தடை செய்யப்பட்ட புலையிலைப் பொருட்களை பள்ளி சிறுவர்களுக்கு விற்பதாக கிடைத்த ரகசியதகவலின் அடிப்படையில், 4 சிறுவர்கள் ஏதோ வாங்கிக் கெண்டு இருந்ததைப் பார்த்து அருகில் செல்ல 4 சிறுவர்களில் 3 பேர்கள் எங்களைப் பார்த்தவுடன் ஓடிச் சென்றுவிடுவும், ஒரு சிறுவனை மட்டும் பிடித்து விசாரிக்க நான் சைனி புலையிலை உபயோகிக்கும் பழக்கம் இருப்பதாகவும், உணவு இடைவேளையில் பள்ளி பின் கேட்டின் முன்பு வந்து எதிரிகள் இருவர்களிடம் வாங்கி பயன்படுத்துவதாகவும், அதனால் போதை உண்டாகும் என்றும், அதே இடத்தில் நின்று கொண்டிருந்த எதிரிகள் இருவர்களையும் பிடித்து விசாரிக்க அவர்கள் அரசால் தடைசெய்யப்பட்ட சைனி பாக்கெட்டுக்கள், R.M.D. பாக்கெட்டுக்களும், சாந்தி பாக்கெட்டுக்கள் ஆகியவற்றை விற்பனை செய்ததாகவும், செய்ய வைத்திருப்பதாகவும், சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை 14.30 மணிக்கு கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலத்தை பதிவு செய்து, 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த சைனி பாக்கெட்டுக்கள்–20 RMD பாக்கெட்டுக்கள் –20 சாந்தி பாக்கெட்டுக்கள் –20 ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், 2ம் எதிரி தான் எடுத்து ஆஜர் செய்த சாந்தி பாக்கெட்டுக்கள்–20, RMD பாக்கெட்டுக்கள் –13, SM–1 ஜர்தா பாக்கெட்டுக்கள்–18, சைனி புகையிலை –17 ஆகியவற்றை 16.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னினையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் எதிரிகள் தான் மறைத்து வைத்திருந்த இடமான

திண்டுக்கல் குட்செட் ரோடு, முட்புதர் அருகே மறைத்து வைத்திருந்த 7 வெள்ளை நிற சாக்குபைகளில் M டொபாக்கோ பாக்கெட் 7200, RMD பாக்கு பாக்கெட்டுக்கள் 3200, SM சர்தா பாக்கு பாக்கெட்டுக்கள் 19040, சைனி பாக்செட் 4000, சாந்தி பாக்கு பாக்கெட் 11,900 ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்த பொருட்களை 16.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்பு எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்து 18.30 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனைக்குப் பின் பாரா வாம் ஒப்புவித்து நிலைய குற்ற எண். 250/2018 சட்டப்பிரிவுகள் 77 JJB Act 2015 மற்றும் 6(a)24(1) COTPA –ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9 என்றும், 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும், 17.08.2018ம் தேதி 16.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ. 11 என்றும், 17.08.2018ம் தேதி 16.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ. 12 என்றும், 17.08.2018ம் தேதி 16.45 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ.13 என்றும் குறியீடு செய்யப்பட்டதாகவும், பின்பு சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

### V. எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்

7. அரசுத்தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்ததும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களை பற்றி எதிரிகளிடம்

குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பில் பொய் வழக்கு போட்டுள்ளதாகவும் கூறினார்கள். தங்களது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என்று கூறினார்கள்.

8. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எ.த.சா.ஆ.1 மற்றும் எ.த.சா.ஆ.2 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**வாதுரைகள்**

**1. அரசுத்தரப்பு வாதம்**

**9.** இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரை விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், ஆவணங்களின் அடிப்படையிலும் எதிரிகளின் மீதான சட்டப்பிரிவுகள் 6 (a) r/w 24 (1) COTP Act and 77 Juvenile Justice (Care and Protection of Children) Act 2015–ன் கீழ் குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகளுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**2. எதிரிகள் தரப்பு வாதம்**

10. இதற்கு மாறாக எதிரிகளின் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதுரையில் எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கின் அ.சா.1, அ.சா.4, 5 ஆகியோர்கள் காவல்துறையைச் சேர்ந்த அக்கறை சாட்சிகள் என்றும், இவ்வழக்கின் சம்பவம் பற்றி கண்ணுற்ற

சாட்சிகள் யாரரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை வலியுறுத்தி சாட்சியம் அளிக்காமல், பிறழ் சாட்சியாகியுள்ளார்கள், சம்பவ நாளன்று பள்ளிவிடுமுறை என்றும், மேற்சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் எதிரிகளுக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

## VI. ஆய்விற்குரிய பிரச்சனை

11. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும், வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான சட்டப் பிரிவுகள் 6(a) r/w 24(i) COTPA Act and 77 juvenile Justice (care and production of Children) Act 2015 – ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## VII) தீர்வு–

12. அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 17.08.2018ம் தேதி 14.00 மணிக்கு திண்டுக்கல் சாலைரோட்டில் உள்ள டட்லி பள்ளி பின் கேட்டின் அருகில் எதிரிகள் இருவரும் தங்களது சுயலாபம் கருதி அரசால் தடை செய்யப்பட்ட சைனி பாக்கெட்டுகள். R.M.D பாக்குகள் சாந்தி பாக்குகள் ஆகியவற்றை பள்ளி சிறுவர்களுக்கும், சிறார்களுக்கும் விற்பனை செய்த

குற்றத்திற்காக சட்டப்பிரிவுகள் 6 (a) r/w 24 (1) COTP Act and 77 Juvenile Justice (Care and Protection of Children) Act 2015– ன் படி குற்றம்சாட்டியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு முன் சட்டப் பிரிவு 77 of JJ Act–ன் அகக் கூறுகளைப் பார்க்க வேண்டும்.

13. 77 JJ act –ன் படி சான்றளிக்கப்பட்ட மருத்துவரின் மருந்துச் சீட்டு இல்லாமல் யாராவது ஒரு குழந்தைக்கோ, அல்லது சிறாருக்கோ, மது, போதைப்பொருள் அல்லது புகையிலையை விற்றால் அல்லது அதைச் கொடுக்கச் செய்தல் 77 JJ act –ன் கீழ் குற்றம் ஆகும்.

14. 6(a) r/w 24(i) COTPA Act– ன் படி 18 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு சிகரெட் மற்றும் பிற புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதை தடை செய்கிறது. அவ்வாறு இந்த விதியை மீறி செய்பவருக்கு 6(a) r/w 24(i) COTPA Act –ன் கீழ் தண்டனை விதிக்கப்படுகிறது.

15. ஆகவே, மேற்படி குற்றச்சாட்டினை நிரூபணம் செய்ய வேண்டுமென்றால் எதிரியானவர் தனது கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் அல்லது போதைப் பொருள்களை 18 வயது உட்பட்ட நபர்களுக்கு கொடுத்திருக்க வேண்டும்.

16. இவ்வழக்கில் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் படி சார்பு ஆய்வாளர் ரோந்து செய்துகொண்டிருந்தபோது, "திண்டுக்கல் டட்லி பள்ளி பின்புறம் கேட் அருகில் வெள்ளை கலர் பிளாஸ்டிக் பையுடன் அரசால் தடை செய்யப்பட்ட

புகையிலை பாக்கெட்டுக்களை விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடம் செல்லும்போது, எதிரிகள் இருவருர் மற்றும் 4 சிறுவர்கள் அந்த இடத்தில் இருந்தார்கள். நாங்கள் அருகில் செல்லும்போது 3 சிறுவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், அங்கிருந்த சிறுவனை விசாரித்தபோது, அந்த சிறுவன் சைனிபுகையிலை சாப்பிடுவதாகவும், மேற்படி இருவரும் தினமும் மதிய வேலைகளில் பள்ளி பின் கேட்டின் முன்பு வந்து நிற்பார்கள் என்றும், பணம் கொடுத்தால் அவர்கள் கையில் வைத்திருக்கும் பிளாஸ்டிக் பையில் இருந்து சைனி புகையிலை பாக்கெட்டுக்களை யாருக்கும் தெரியாமல் எடுத்து தருவார் என்றும், அதை வாங்கி தான் சாப்பிடுவேன் என்றும், அதை சாப்பிட்டால் போதை ஏறும்" என்று சொன்னதாக குறிப்பிட்டுள்ளது.

17. மேலும், அரசு தரப்பில் சொல்லப்படும் சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும்பட்சத்தில், பொதுமக்கள் யாரையும் தனிநபர் சாட்சியாக வழக்கில் விசாரிக்கப்படவில்லை. மேலும், அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளபோது, எதிரிகள்தான் மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டார்களா என்ற சந்தேகம் உள்ளது. மேலும் இவ்வழக்கில் எதிரிகள் ஒரு சிறுவனிடம் புகையிலையை விற்றதாக கூறும்பட்சத்தில் அந்த சிறுவனை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை. அல்லது அவர்களின் பெற்றோர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை.

18. அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட கைப்பற்றுதல் மகஜரின் சாட்சியான அ.சா.2 விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில்

ஆஜர் எதிரியை தெரியாது என்றும் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், கடந்த 17.08.2018ம் தேதி தனது சொந்த வேலை காரணமாக டட்லி பள்ளி பின்புறம் நடந்து வந்துகொண்டிருந்தபோது போலீசார் ஒரு கடையில் விசாரித்து பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அது என்ன பொருட்கள் என்று தெரியாது என்றும், கடையில் விசாரித்துக் கொண்டிருந்த நபரை தெரியாது என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேலும், மற்றொரு கைப்பற்றுதல் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் டட்லி பள்ளி பின்புறம் நின்றுகொண்டிருந்தபோது ஒரு கடையில் விசாரித்துக்கொண்டிருந்த நபரை அடையாளம் தெரியாது என்றும், கையொப்பம் பெற்று சென்றார்கள் என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளபோது எதிரிகள் தான் சிறுவனிடம் புகையிலைப் பொருட்களை கொடுத்தார் என்றோ, அல்லது எதிரியிடமிருந்துதான் புகையிலைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது. மேலும், அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில், "எதிரிகளை எங்கு வைத்து கைது செய்து, காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததை இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19. ஆகவே, சிறுவர்கள் மேற்படி எதிரிகளிடம் பணம் கொடுத்து புகையிலைப் பொருட்கள் வாங்கியதாகவோ, சிறுவர்களிடமிருந்து புகையிலைப் பொருட்களை கைப்பற்றியதாகவோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. அரசு தரப்பு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் M.டொபோகோ–720 பாக்கெட், 2. RMD பாக்கு – 3633 பாக்கெட், SM –1 ஜர்தா பாக்கு – 19058, சைனி புகையிலை

பாக்கெட்டுக்கள்–4037, சாந்தி பாக்கு 11937 பாக்கெட்டுக்கள் ஆகியவற்றை எதிரிகளிடம் தான் கைப்பற்றப்பட்டது என்பதை அரசு தரப்பு நிரூபணம் செய்ய வில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. மேலும், அ.சா.5 தனது குறுக்கு விசாரணையின் போது, சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படும் நாள் பள்ளி நடைபெற்றதா, விடுமுறையா என்றால் பள்ளி நடைபெற்றது என்றும், சம்பவ நாளான 18.08.2018ம் தேதி வாஜபாய் இறந்ததால் அவரது உடல் தகனத்திற்காக பள்ளிகள் அனைத்தும் விடுமுறை விடப்பட்டுள்ளது என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளபோது இவ்வழக்கில் எ.த.சா.ஆ. 1ஆக குறியீடு செய்யப்பட்ட 18.08.2018ம் தேதி தினந்தந்தி வெளியிட்ட தினசரி நாளிதழை பரிசீலனை செய்யும்போது மேற்படி நாளில் பள்ளி விடுமுறை என்று தெரியவருகிறது. மேற்சொன்ன சங்கதிகளை மறுத்தோ, அல்லது ஆவணங்கள் மூலமாகவோ அரசு தரப்பு மேற்சொன்ன முரண்பாட்டை தெளிவுபடுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. மேலும், இவ்வழக்கில் எதிரிகள் சிறுவர்களுக்குத்தான் புகையிலை விற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு அவர்கள் சிறுவர்களின் வயதை நிரூபிப்பதற்காக எந்த ஒரு சாட்சியமும் அல்லது சான்றாவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. சிறுவர்கள் வாங்கியதாகவோ, அல்லது சிறுவர்களிடம் புகையிலைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

22. ஆகவே எதிரிகள், சிறுவர்களுக்கு போதை பொருள் மற்றும்

புகையிலை ஆகியவற்றை விற்றுக் கொண்டிருந்தார் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

23. முடிவாக, எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவுகள் 6(a) r/w 24(i) COTPA Act and 77 juvenile Justice (care and production of Children) Act 2015ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, 1, 2 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

24. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட வழக்குச் சொத்தான RPR No.127/2018ல் உள்ள வழக்குச் சொத்துக்களான Item No. I. உள்ள 1 முதல் 5, Item No.II ல் உள்ள 1 முதல் 3, Item No.IIIல் உள்ள 1 முதல் 4 ஆகியவற்றை இந்நீதிமன்ற Crl.M.P.No.7470/2018 நாள்.04.10.2018–ன் படி ஏற்கனவே அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி வழக்குச் சொத்துக்களை அழித்து, அதன் புகைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

25. மேலும், வழக்குச் சொத்தான RPR No.127/2018ல் உள்ள Item No. I ல் வரிசை எண்.6 ல் உள்ள வெள்ளை நிற சாக்குகள்–7 ஐ மேல் முறையீடு காலத்திற்குப் பின்பு அழித்திட இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

26. இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.18 17:16:43 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | சந்தியாகு ஆரோக்கியம் த/பெ. மைக்கேல்ராஜ் | 16.09.2023 | – |
| 2. | அ.சா.2 | சதீஸ்குமார் த/பெ. பொன்னுச்சாமி | 19.06.2023 | அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 |
| 3. | அ.சா.3 | செபஸ்டியான் த/பெ. சேசுராஜ் | 19.06.2023 | அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.8 |
| 4. | அ.சா.4 | மோகனசுந்தரம் த/பெ. மாரியப்பன் | 05.10.2023 | |
| 5. | அ.சா.5 | மகேஷ் த/பெ. ஜெயராமன் | 03.11.2023 | அ.சா.ஆ.9, அ.சா.ஆ.16. எ.த.சா.ஆ.1, எ.த.சா.ஆ.2 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 17.08.2018 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.2 | 17.08.2018 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.2 | 17.08.2018 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.2 | 17.08.2018 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் |
| | அ.சா.ஆ.5 | அ.சா.3 | 17.08.2018 | அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் |
| | அ.சா.ஆ.6 | அ.சா.3 | 17.08.2018 | அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் |
| | அ.சா.ஆ.7 | அ.சா.3 | 17.08.2018 | அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் |
| | அ.சா.ஆ.8 | அ.சா.3 | 17.08.2018 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் |
| | அ.சா.ஆ.9 | அ.சா.5 | 17.08.2018 | முதல் தகவல் அறிக்கை |
| | அ.சா.ஆ.10 | அ.சா.5 | 17.08.2018 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| | அ.சா.ஆ.11 | அ.சா.5 | 17.08.2018 | 16.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| | அ.சா.ஆ.12 | அ.சா.5 | 17.08.2018 | 16.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| | அ.சா.ஆ.13 | அ.சா.5 | 17.08.2018 | 16.45 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| | அ.சா.ஆ.14 | அ.சா.5 | 17.08.2018 | படிவம் 95 மற்றும் புகைப்படம் –7 |
| | அ.சா.ஆ.15 | அ.சா.5 | 17.08.2018 | Crl.M.P. No. 7470/2018 நீதிமன்ற உத்தரவு |
| | அ.சா.ஆ.16 | அ.சா.5 | 09.03.2026 | அழிப்பு செய்ததற்கான புகைப்படம் |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

**IV. <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை

**<u>V. சான்றாவணங்கள்</u>**:

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | எ.சா.ஆ.1 | அ.சா.5 | 18.08.2018 | விடுமுறை அறிவிக்கப்பட்டு தினத்தந்தி நாளிதழில் வெியிட்ட செய்தித்தாள் |
| 2. | எ.சா.ஆ.2 | அ.சா.5 | 18.08.2018 | எதிரி அவரது காரை ஸ்ரீ லக்சண்யா கார் சர்வீஸ் செய்த ரசீது |

**VI. <u>சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.18 17:16:51 +0530

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திண்டுக்கல்.**

**<u>குறிப்பு:</u>**

1. வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் / காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.